RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s186

OPEN ACCESS

# சங்க காலத்தில் காணப்பட்ட நான்கு விதமான சமூகம்

**மா. கலைவாணி [அ, *], வே.அ. பழனியப்பன் [அ]**

[அ] தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா.

# The Four Social Groups that Predominated the Sangam Era

**M. Kalaivani [a, *], V.A. Palaniyappan [a]**

[a] Department of Tamil, Ganesar Arts and Science College, Melasivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author:
duraikalai86@gmail.com

Received: 01-09-2022
Revised: 30-10-2022
Accepted: 12-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

All the relationships that man takes do not become social relationships. Social relationship occurs when one person. Perceives the presence of another person. Social relationships arise from the destruction something between two or more people. Such social relationships create society. Wherever social relationships are found there is a life of society. Wherever social relationship is found there is a life of society. Through sociology study, one can clearly understand how a society came into being, how it is structured, how it can get rid of defects imposed on the human being in the way of upbringing and provide a perspective that elevates human life to a higher level. Ability can also be developed history of social life associated problems are as old as society in the early days of human civilization, we call society the complex social relationship of living together with others. This study traces the graduate development of a species or group into a cultured one. This Article is to mention four types of Society and fall how this society came into being.

**Keywords:** Relationships, Tamil Society, Human Life, Relationship

## முன்னுரை

சமூகத்தைப் பற்றிய அறிவியல் சமூகவியல் எனப்படும். சமூகவியல் என்பது சமூக அமைப்புகளையும், உண்மைகளையும் அறிவியல் அடிப்படையில் ஆராயும் முறை ஆகும். சமூக அமைப்பு என்பது ஒரு குழு மனிதர்கள் சில வகையான கூட்டுச்செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பார்கள், மேலும் இவர்கள் மற்ற அங்கத்தினர்களுடன் பல வகையான வழிகளில் தொடர்பு கொண்டவர்களும் ஆவர். சமூக உண்மைகளானவை தனி மனிதனுடைய முறைப்படுத்தப்பட்ட நடத்தை முறைகளாகும். இத்தகைய முறைகள் சமூக அமைப்புகளின் மூலமாகத் தனிமனிதன் மீது திணிக்கப்படுகின்றன.

சங்ககாலம் நீண்ட நெடிய பரப்புடையது. இன்று கிடைத்துள்ள சங்க இலக்கியப் படைப்புகளை வாசிக்கும் போது, பலவித சமூக அமைப்புகளும், மக்களும் இருந்தமை புலப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் உணவு சேகரிக்கும் வாழ்க்கை நிலை, வேட்டையாடும் வாழ்க்கைநிலை, காடுகளை எரித்துப்பயிர் செய்யும், வாழ்க்கைநிலை கால்நடை வளர்ப்புநிலை, பயிர்தொழில் செய்யும் வாழ்க்கை நிலை ஆகியவற்றைக் காணமுடிகிறது. மக்களின் வாழ்க்கை முறைகளை வைத்துச் சங்கச் சமுதாயத்தை நான்கு படிநிலை வளர்ச்சிபெற்ற சமூக வகைகளாகப் பிரிக்கலாம்.

அவை,

1. வேட்டை சமூகம்
2. ஆயர் சமூகம்

3. வேளாண் சமூகம்
4. வணிக சமூகம்

## வேட்டைச் சமூகம்

வேட்டைநிலை என்பது தமிழர்களின் ஆதிகாலநிலை அன்றைய காலகட்டத்தில் உணவுக்காக அனைவரும் சேர்ந்து நின்று வேட்டையாடினார். வேட்டையில் கிடைக்கும் பொருளை அனைவரும் பங்கிட்டு கொண்டனர். கொடிய விலங்குகளைத் தாக்க பெரிய கூட்டமாகச் சென்றனர். வேட்டை உணவைப் பாதுகாத்து வைக்க முடியாததால், மிச்சத்தைப் பகிர்ந்து கொண்டனர். இந்நிலையில் மக்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றோ, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளோ இல்லை. அனைவரும் சமம் என்ற நிலையே இருந்துள்ளது. வேட்டை மக்களை வழிநடத்திச் செல்வதற்கு வேட்டைத் தலைவன் இருந்துள்ளான். இவன் மக்களோடு செல்வதற்கு வேட்டைத் தலைவன் இருந்துள்ளான். இவன் மக்களோடு மக்களாக ஊர்ப் பொது இடங்களில் படுத்து உறங்கியவன் தனக்கு உணவு இல்லாத போது கடன் வாங்கி உணவு உண்டவன். தனக்கு என்று சொத்துக்களைச் சேர்த்து வைத்து கொள்ளாத பொதுஉடைமை நிலையே காணப்பட்டுள்ளது. மக்கள் குழுக்களாக வாழ்ந்துள்ளனர். வேட்டையில் ஈடுபடும் இனக் குழுக்கள் ஒவ்வொன்றும் இரத்த உறவுமுறை கொண்டதாம்.

## ஆயர் சமூகம்

வேட்டைச் சமூகத்திலிருந்து சிறிது வேறுபட்ட நிலையே ஆயர் சமூகமாகும். இச்சமூகத்தில் ஆடுமாடுகள் பெரும் செல்வமாக கருதப்பட்டன. ஒவ்வொருவரும் தனக்கென ஆடுமாடுகளை வைத்திருந்தனர். கால்நடை வளர்ப்பும், புராதன வேளாண்மையும் தோன்றின. உணவு சேகரிப்போர் பகுதி உற்பத்தியாளராய் மாறினர் ஆரம்பத்தில் கால்நடை வளர்ப்பும், வேளாண்மையும் இணைந்தே இருந்தன. காலப்போக்கில் இக்குழு இரண்டாகப் பிரிந்து ஒரு குழு பழைய வேட்டையாடும் முறையை விடமுடியாமல் பழைய வேட்டைத் தொழிலையே முதன்மையாக மேற்கொண்டது. மற்றொரு குழு கால்நடை வளர்ப்பதிலும், விவசாயத்திலும் ஈடுபட்டது. இன்றைக்கு சில மலைவாழ் மக்கள் இம்முறைகளில் வாழ்வதைக் காணமுடிகிறது. ஆயர்சமூக அமைப்பில் தனியுடைமை தோற்றம் பெற்றது. ஆடுமாடுகளைப் பாதுகாப்பதற்கும், மற்றவர்களிடமிருந்து தன்னையும், தன் செல்வங்களையும் காப்பதற்காகவும் ஒரு தலைவன் தேவைப்பட்டான். கோல் வைத்திருந்தவன் கோனாக மாற்றப் பெற்றான். இப்படித்தான் அரசத் தோற்றம் உருவாயிற்று "எதிரிகளின் ஆக்கிரமிப்பாலோ அல்லது உணவு நெருக்கடியாகவோ ஏற்பட்ட நிலைமை காரணமாகத் தற்காலிகத் தலைமை வெகு எளிதில் நிலையானதாக ஆகிவிடும் (Pascal Gilbert, 1964). தொல்காப்பியத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என அகப்பாடலுக்கு திணை வகுத்ததுபோல் புறந்திணைகளாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்மை எனப் பகுக்கப்பட்டுள்ளன. வெட்சி என்பது ஆநிரை தொடர்பானது நிரை கவர்தல் மற்றும் மீட்டல் என்பது ஆயர் சமூகத்தில் தான் முதலில் தொடங்கியிருக்க வேண்டும். கவர்ந்த நிரையை மீட்டு வருவதற்கான போரும் இங்குதான் தோன்றியிருக்க வேண்டும். நிரை கவர்தற்கும், நிரை மீட்டலுக்கும் இனக் குழுத்தலைவர்களே காரணமாக இருந்துள்ளனர். இக்குழுத் தலைவர்கள் பின்னாளில் சீறூர் மன்னர்களாகவும் மாறியுள்ளனர்.

"அரசு ஆதிகாலத்திலிருந்து வந்ததல்ல. அது இல்லாமல் சமுதாயங்கள் இருந்து வந்துள்ளன. அச்சமுதாயங்களுக்கு அரசு பற்றியோ, அரசு அதிகாரம் பற்றியோ ஒன்றும் தெரியாது. பொருளாதர வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபடுவதுடன் இது அவசியாகப் பிணைக்கப்பட்டிருந்தது. இப்பிளவின் காரணமாக அரசு அவசியமாகிவிட்டது" (எங்கல்ஸ் 2008) என்ற எங்கல்ஸின் கருத்து இங்கு ஏற்கத்தக்கதாக உள்ளது. சங்க இலக்கியத்தில் இருவேறுபட்ட உடைமைச் சமூக அமைப்புகளைக் காணமுடிகிறது. ஒரு புறம் தொன்மைப் பொது உடைமைச் சமுதாயம், மறுபுறம் தனிச்சொத்துரிமை உடைய சமுதாயம் இவ்விரு சமுதாயத்தைப் பற்றிய பாடல்களைப் புறநானூற்றிலும், ஆற்றுப்படை நூல்களிலும் காணலாம். பெரும்பாணாற்றுப்படையில்

எயிற்றியர்குடி குடிசையாக உள்ளது. இவர்கள் புல்லரிசி எடுத்து விருந்தினர்களுக்கு வாடுன் புழுக்கல் உணவை அளித்துள்ளனர். முயல் வேட்டையாடியுள்ளனர். உடும்புகறி சமைத்துள்ளனர். இது வேட்டைச் சமூகநிலை, முல்லை நிலத்தில் கிடைக்கும் வரகுச் சோறு, அவரைப் புழுக்கு, குறிஞ்சி நிலத்தின் தினைப்பயிர் ஆகியனவும் கால்நடை வளர்ப்பும், விவசாயமும் இணைந்த நிலையைக்காட்டுகிறது. இனக்குழுச் சமூக எச்சங்களின் விளைநிலங்களாகப் புன்செய் நிலப்பகுதிகளே காணப்படுகின்றன. இங்கு குரவம், தளவம், குருந்து, முல்லை முதலிய பூக்களும் வரகு, தினை, கொள், அவரை ஆகிய தானியங்களும் விளைந்துள்ளன (Balasubramanian, 2010).

வேட்டை சமூகத்தில் ஆளுமை செலுத்தத் தொடங்கிய தலைவன், ஆயர் சமூகத்தில் சிறிது வளம் பெற்றவனாகக் காணப்படுகிறான். இவர்களைப் பற்றி செய்திகள் புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன. இவர்கள் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பெற்றுள்ளனர் பருத்தி வேலிச் சீறூர் கரம்பைச் சீறூர் நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர் நெல் விளையாதேஇவர்கள் மட்டும் அல்லாது கடையெழு வள்ளல்களும் இச்சமூகத்தை சேர்ந்தவர்களே. ஏனெனில் இவர்கள் மலையும் மலை சார்ந்த பகுதியையும் ஆட்சி செய்தவர்கள் ஆவர்.

## வேளாண் சமூகம்

காடுகளிலும் மலைகளில் வாழ்ந்த மனித இனம் சிறிது சிறிதாக முன்னேறி நீர்வளம் மிக்க இடங்களில் தங்கி வாழ்ந்து வந்தனர். தம் அருகில் இருக்கும் காடுகளை அழித்து வளம் பொருந்திய நன்செய் நிலங்களாக மாற்றினர். காட்டை அழித்து விளை நிலங்களாக மாற்றியதைப் பட்டினப்பாலை சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

“காடு கொன்று நாடாக்கி

குளந்தொட்டு வளம் பெருக்கி

பிறங்கு நிலை மாடத் துறத்தை நோக்கிக்

கோயிலொடு குடிநிறீஇ”

இதனால் வேளாண் உற்பத்தி தொடங்கப்பெற்றது. “வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும், ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனி சொத்துரிமையும் அரசம் தோன்றிய வரலாற்றுக்காலம் என்பதை மானிடவியல் நோக்கொடு சங்க இலக்கியத்தைக் காண்போர் அறியலாம்” (Nagarajan, 2017). எனவே தனிச் சொத்துரிமையே நிரந்தர அரசு தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. வேளாண் சமூகத்தில் நிலைகளை அமைக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் தோன்றிய தலைமை அமைப்பு என்பது ஆதிகாலச் சமுதாய அமைப்புக்கும் குடிநிலைச் சமூக அமைப்புக்கும் இடைப்பட்ட ஒரு மாற்ற நிலையில் உருவான அமைப்பு அரசமைப்பாக உருவெடுத்து அரசு தோன்றுவதற்குக் காரணம் பல உள. வேளாண் சமூகத்தின் வாழ்க்கை அமைப்பு மற்ற இரு சமூகத்தின் வாழ்க்கை முறைகளை விட முற்றிலும் மாறுபட்டது. வேளாண் பொருள்களின் உற்பத்தி, உபரி உற்பத்தியின் பெருக்கம் ஆகியன மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. ஊர், நாடு, நகரம், என்ற நிலை ஏற்பட்டது. மருத நிலம் வேளாண் உற்பத்தி நிலமாக மருதத்திணையாகப் புலவர்களால் பாடப்பட்டது. வேளாண்மையின் அவசியம் குறித்தும், பெருகத்தின் முக்கியத்துவம் குறித்தும் அரசர்களுக்கு வள்ளல்களுக்கும் புலவர் பெருமக்கள் அறிவுறுத்திப் பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

“அந்தண் காவிரி வந்து கவர் பூட்டத்

தோடுகொள் வேலின் றோற்றம் போல

ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்

நாடெனப் படுவது நினதே (Balasubramanian, 2010)

இங்கு நன்செய் வேளாண்மையின் மேம்பாடும், நீர்வளப் பெருக்கமும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்”

என்கிறது திருக்குறள் (Parimelagar, 2017). பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் வேளாண் தொழிலின் தேவையை எடுத்துக் கூறுகிறார்.

“நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்

உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே

உண்டி முதற்றே யுணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

குடம்பு முயிரும் படைத்திசினோரே”

நிலம், நீர் ஆகிய இரண்டின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீரை அடிப்படையாகக் கொண்டு அமையும் கொண்டு உடம்புக்கு உணவு தருபவரே உயிர் தருபவர். அந்த உணவு நீரும் நிலமுமே ஆகும். உடம்புக்கும் உயிருக்கும் அவசியமான உணவின் தேவையானது வலியுறுத்தப் பெற்றுள்ளது. புலவர்களின் அறிவுறித்தலுக்கு இணங்க அரசத் தோற்றம் பெற்ற பிறகு குளங்கள் வெட்டுவதும், பாசன முறைகளைச் சீர்செய்வதுமே அரசின் முக்கியமான கடமையாகக் கருதப்பெற்றது. ஐவகை நிலங்களிலும், மருத நிலமே, நாகரிகமும் பண்பாடும் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. பொருளாதார மேம்பாடு, பழக்கவழங்கங்களையும், பண்பாடுகளையும், உயர்த்துவதற்குக் காரணமாக அமைந்தது (Balasubramanian, 2010).

“அரசு சமுதாயத்திலிருந்து தோன்றுகிறது. நிலையான சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவும், பல மக்கட் கூட்டங்களிடையே ஒற்றுமையும் தொடர்பும் ஏற்படுத்தவும் ஒரு வலிமையுள்ள மேலான அதிகாரம் சமூகத்தை நிலை நிறுத்த வேண்டியிருக்கிறது. மேலும் இந்நிறுவனம் சட்டத்தைப் பயன்படுத்த வலிமையுள்ளதாக இருக்க வேண்டும். அரசின் முக்கியமான அம்சம் இதுவேயாகும். சமுதாயத்தை அடக்கி ஆளும் மேலான அமைப்பு என்று அரசை வரையறுத்துக் கூறலாம்.” மேலே சொல்லப்பெற்ற கருத்துக்கேற்பச் சமூக மாற்றமும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படும் போது மக்களைக் கட்டுப்படுத்தவும் (Pascal Gilbert, 1964). பாதுகாக்கவும் ஒரு தலைமை தேவைப்படுகிறது. வேளாண் உற்பத்தி தொடங்கும் மருத நிலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு உதவும் கூடுதல் தொழிலாளர்கள் பலர் காணப்படுகின்றனர். மற்ற இரு சமூகங்களில் காணப்படாத அடுக்குமாடி வீடுகளும், வீடுகட்டுவோரும், அரசும், அதைச் சார்ந்த நிர்வாக அமைப்புகளும் தோன்றுகின்றன. வேளாண் சமூகம் மற்ற இரு சமூகங்களை விட மேலானதாக உள்ளது.

## வணிகச் சமூகம்

வேளாண் சமூகத்தில் உண்டாகும் கூடுதல் பொருள்களின் பெருக்கத்தால் வேளாண் சமூகத்திலிருந்து வணிகச் சமூகம் உருவாகிறது. பண்டைத் தமிழர்கள் கடல் கடந்தும் உள்நாட்டிற்குள்ளும் வாணிபம் செய்வதில் சிறந்து விளக்கியுள்ளனர். இவ்வணிகச் சமூமே நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாய் அமைந்து வணிகத்தில் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் வந்த பொருள்களைப் பற்றிய பட்டினப்பாலை நூல் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

“அளந்து அறியாப் பல பண்டம்

வரம்பு அறியாமை வந்து ஈண்டி

அருங் கடிப் பெருங்காப்பின்

வலிடைய வல்சுணங்கின் நோன்

புலிப் பொறித்து, புறம் நோக்கி

நீரின் வந்த நிமிர்பிரிப் புதவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்

கங்கை வாரியும், காவிரிப் பயனும்

ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்”

வெளிநாடுகளிலிருந்து கடல் வழியாக வந்த பொருள்களையும், தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு சென்ற பொருகள்களைப் பற்றியும் பட்டினப்பாலை சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. வணிகர்கள் அறநெறி பிழையாதவர்கள் என மதுரைக்காஞ்சி கூறுகிறது (Nagarajan, 2017). பட்டினப்பாலை வணிகர்களின் சிறப்பையும் மேன்மையையும் எடுத்துரைக்கிறது. உயர் குடிப்பிறந்த வணிகர் கொலை விலக்கி, களவு நீக்கி தேவர்பேணி, ஆவுதிபெய்து, ஆநிரை பகடு, புறம் தந்து, நான்மறை அந்தணர் புகழ்பரப்பு, புண்ணியம் முட்டாக் குறையில்லாது தண்ணென வாழுகின்றனர். இவர்களே மேழிச் செல்வம் படைத்த உழவர்கள், நுகத்துப் பலகை போல நடுநிலை தவறா நெஞ்சினர்.

“கொலை கடிந்தும், களவு நீக்கியும்

அமரர்ப் பேணியும், ஆவுதி அருந்தியும்

தடவும் பிறவும் ஒப்ப நாடி

கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகெடாது”

சங்க இலக்கியத்தில் தொன்மையான பண்டமாற்று முதல் கடல்வழி வாணிபம் வரை நடந்த வாணிபம் குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன. முல்லைத்திணைப் பாடல்கள் தலைவன் தலைவியை விடுத்து, பொருள் தேடுவதற்குச் சென்றதை எடுத்துக் கூறுகின்றன (Nagarajan, 2017). சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தமது அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று முறையில் பெற்றுக்கொண்டனர். “பெரிய பட்டினங்களிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது.” இடையர்கள் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக் கொண்டனர். ஆயர் மகளிர் தயிரையும், மோரையும் கொடுத்துத் தானியத்தைப் பெற்றுக்கொண்டனர். வேடன் தான் வேட்டையாடிக் கொண்டு வந்த மான் இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதைக் கோவூர் கிழார் தன் பாடல்களில் கூறியுள்ளார். பாணர்கள் தான் பிடித்த மீன்களை விற்றுத் தானியமாக மாற்றிக் கொண்டனர். (உப்பு வணிகர்கள் நெல்லுக்கு மாற்றாக உப்பை விற்றனர் (Dakshinamurthy, 2017).

“உமணர் தந்த உப்பு நொடைநெல்”

கடலில் கப்பலோட்டுவது அக்காலத் தமிழருக்கு கைவந்த செயலாயிற்று (Balasubramanian, 2017). அவர்கள் கடல் கடந்து வாணிகம் செய்து பொருளை ஈட்டினர். அது போலவே தரைவழியாகவும் பல இடங்களுக்குச் சென்று பொருளை ஈட்டினர். பெரிய வாணிகம் செய்தவர்களுக்குப் பெருங்குடி வாணிகர் என்று பெயர். அயல் நாடுகளுக்கு வாணிகம் செய்யச் சென்றவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாகச் சென்றார்கள். வணிகக் கூட்டத்துக்கு வணிகச் சாத்து என்று பெயர் தமிழகத்தில் கடல் வாணிகம் சிறப்போடு விளங்கியது. பலரும் அதில் ஈடுபட்டனர். கடல் கடந்து செல்லும் போது மகளிரை உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது (Balasubramanian, 2017).

“முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை”

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே கடல் வணிகம் சிறப்புற்று இருந்தமை தெரிகிறது (Ilampuranar, 2017). கடல் வாணிகம் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. கடலில் மரக்கலங்கள் சென்றதைப் பதிற்றுப்பத்து மதுரைக்காஞ்சி சேரர்கள் கப்பல்

படை வைத்திருந்ததைப் பதிற்றுப்பத்து கூறுகிறது (Nagarajan, 2017). கப்பல்களில் தொழில் செய்யும் மாலுமிகள் துறைமுகங்களில் கள் உண்டதை நற்றிணை கூறுகிறது. தமிழர்கள் கடல்கடந்து சென்று வாணிபம் செய்து செல்வத்தைக் குவித்தனர். மேலைநாடுகளிலிருந்தும், கீழைநாடுகளிலிருந்தும் பலர் வாணிகம் செய்ய தமிழகத்திற்கு வந்துள்ளனர் (Balasubramanian, 2017).

“மொழிபல பெருகிய பழதீர்தே எத்துப்

புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்

முட்டாச் சிறப்பிற் பட்டினம்” (Nagarajan, 2017)

யவனர்கள் தமிழகம் வந்ததையும், அவர்களின் பொருட்சிறப்பினையும் நெடுஞல்வாடை கூறுகிறது.

“யவனர் இயற்றிய வினைமான பாவை

கையேந் தையகல் நிறைய நெய் சொரிந்து

பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிபிர்எரி (Nagarajan, 2017)

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளிரோவெனச் சேரிதொறும் நுவலும்”

பண்ட மாற்றுமுறை பண்டைய வழக்காக இருந்தாலும் அண்மைக்காலம் வரை இம்முறை தொடர்ந்து காணப்படுகிறது (Balasubramanian, 2010). பண்டமாற்று முறையில் அரசுக்கு அதிக வருமானம் இல்லை. கடல் வாணிபத்தில் அரசு நடத்துவதற்குத் தேவையான பொருளாதாரம் அதிக அளவில் கிடைத்தது. ஆதாலால் அரசனுக்கும் வணிகருக்கும் நல்ல உறவு இருந்துள்ளதை இலக்கியங்கள் காட்டுகின்றன. அரசனுக்குரிய ‘உல்கு’ வரிப்பொருள் தரக் கடமைப்பட்டவர்கள் வணிகர்கள். இத்தகைய வருவாய்கு வழி செய்த வணிகர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசனுக்கு உண்டு என்பதைப் புலவர் ஒருவர் கூறியுள்ளார்.

“பகடு புறந்தருநரின் பாரம் ஓம்பி

குடி புறந்தரு குவையாயின் நின்

அடிபுறந்தருகுவர் அடங்கா தோரே”

“மதுரைக்காஞ்சி” மதுரை நகர அங்காடி வீதிகளில் அல்லங்காடி, நாளங்காடி எனும் இரவு சந்தையும் பகற்சந்தைகளையும் வியாபார மையங்களாக விளங்கியதை விளக்குகிறது. பகல் சந்தையில் விற்கக் கூடிய பொருள்களையும் விளக்குகிறது. பத்துப்பாட்டுத் தொகுதியில் பெரும்பாணூற்றுபடை. மதுரைக்காஞ்சி பட்டினப்பாலை ஆகிய நூல்கள் தமிழரின் வாணிகச் சிறப்பை விளக்குகின்றன. பண்டைய நாளில் வேளாண் சமூகத்தை விட வணிகச் சமூகம் சிறப்போடு விளங்கியமை தெரிகிறது. தமிழகத்தில் பல இடங்களில் கடற்கரை ஒட்டியுள்ள பகுதிகளில் பல பெரிய துறைமுகங்கள் அமைந்திருந்தன. அவை கொற்கை, காவிரிபூம்பட்டினம், எயில்பட்டினம், தொண்டி, முசிறி, ஆகியன. கடல் வாணிகம் செய்வதில் தமிழர்கள் ஆர்வம் காட்டினார். “கடலில் போய்வருவது தமிழர்களுக்குப் பழங்காலம் முதல் இயற்கையான தொழிலாக இருந்தது. கடலில் நெடுந்தூரம் கப்பலில் போகவும் வரவும் பழங்காலத்திலேயே பழகினார்கள்” (Balasubramanian, 2010).

“நளியிரு முந்நீர் நாவாய் ஒட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக

பாவை விளக்கின் பரூஉச்சுடர் அவிழ்”

பிறநாட்டு வாணிகர்களாலும் தமிழகத்திற்குச் செல்வங்கள் பெருகின. தமிழகத்தின் பொருளாதாரச் சிறப்பு வணிகர்களாலே பெருகியது. ஆதலால் வேளாண் தொழில் செய்பவர்களைவிட வணிகர்களுக்குச் செல்வாக்கும் மதிப்பும் கூடின. தொல்காப்பியரும் “அந்தணர், அரசர், வணிகர்,

வேளாளர்" என அரசருக்கு அடுத்த நிலையில் வணிகர்கள் இருந்ததைக் கூறுகிறது. இதிலிருந்து வணிக சமூகம் மேலோங்கியதை அறிய முடிகிறது (Nagarajan, 2017).

## முடிவுரை

சங்க கால மன்னர்களைப் பற்றிய செய்திகள், அரசு பற்றிய செய்திகள் புற இலக்கியங்களில் மட்டுமல்லாது அக இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. சங்க காலத்தில் உருவாகிய முதல் சமூகம் வேட்டைச் சமூகமாகும். இச்சமூகத்தில் இனக்குழுத் தலைவன் காணப்படுகின்றான். இங்கு மக்களிடையே வேற்றுமை இல்லாத ஒரு சமூக மரபு காணப்படுகிறது. வேட்டைச் சமூகத்தில் உருவாகிய இனக்குழுத் தலைவன் ஆயர் சமூகத்தில் சிறிது வளம் பெற்று சீறூர் மன்னனாகத் தோற்றம் பெறுகிறான். வேளாண் சமூகமே நிலையான அரசு உருவாக்கத்திற்கும் வேந்தர்களின் தோற்றத்திற்கும் காரணமாகிறது. வேளாண் பொருள்களின் பெருக்கம், உபரி உற்பத்தி, நெய்தல் நிலத்தில் ஏற்பட்ட வணிகம் ஆகியன வேந்தர்களின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் காரணமாகின்றன.

## References


Balasubramanian, K.V. (2010) Purananuru, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2017) Nattrinai, New Century Book House, Chennai, India.

Dakshinamurthy, A. (2017) Kurunthogai, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2008) Tholkappiyam Porulathigaram, Saradha Pathippagam, Chennai, India.

Nagarajan, M. (2017) Nedunelvadai, New Century Book House, Chennai, India.

Parimelagar, (2017) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Pascal Gilber, (1964) Samugaviyalin adipadai Kotpadukal, Tamil Velliyeettu kazhagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License